# EMPOWERING JOURNALISTS; STRENGTHENING THE SLMMF

*A Year of Action and Achievement*

**ACTIVITY REPORT 2025/2026**

SRI LANKA MUSLIM MEDIA FORUM

EST. 1995

· SLMMF ·







# ஊடகர்களை வலுவூட்டல்; அமைப்பை பலப்படுத்தல்!

ஒரு வருட செயற்பாடுகளும் அடைவுகளும்!

# Executive Committee - Sri Lanka Muslim Media Forum 25/26



**FOUNDER PATRON**
N.M.Ameen
(Editor- Uthayam)



**PRESIDENT**
M.B.M. Fairooz
(Editor- Vidivelli)



**SECRETARY**
Shums Fahim
(Local News Editor, Thinakaran)



**TREASURER**
Kiyas A. Buhary
(Editor, Newsplus.lk)



**NATIONAL ORGANIZER**
Rifthy Ali
(Editor, Vidiyal.lk)



**VICE PRESIDENT**
Sihar Anees
(Editor-Insight News)



**VICE PRESIDENT**
Jemsith Azeez
(Journalist)



**VICE SECRETARY**
Ramzi Kuddoos
(Sub Editor, Thinakaran)



**VICE SECRETARY**
Sameeha Zafeer
(Editor- Newsbar)



**VICE TREASURER**
A.H.M. Fowzan
(Annoncer, SLBC)



M.A.M.Nilam
(Senior Journalist)



Furqan B.Ifthikar
(Senior Broadcaster)



Javid Munawwar
(Senior Journalist)



Irshad A. Cader
(Broadcaster, SLRC)



U.L.Mabrook
(Editor- Puthithu)



Sadiq Shihan
(Journalist, Thinakaran)



M.F. Rifas
(Freelance Journalist)



Ashraf A.Samad
(Freelance Journalist)



S.M. Rizwan
(Web Editor, Thinakaran)



S.N.M. Suhail
(News Editor, Vidivelli)



S. A.M.Fawaz
(Information officer)

# 30ஆம் ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் 2025 செப்டம்பர் 27ஆம் திகதி கொழும்பு – 10 தபால் தலைமையக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இதில் சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பிரதம அதிதியாகவும், இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி விசேட அதிதியாகவும் கலந்துகொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் மற்றும் புத்திஜீவிகளும் பங்கேற்றனர். இதன்போது, 15 ஊடகவியலாளர்களுக்குச் சிங்கப்பூர் ரோயல் கிங்ஸ் குரூப் தலைவர் எஸ்.எஸ். சிராஜுதீனால் நிதியுதவி வழங்கப்பட்டது.






# செயற்குழு பதவி வழி நியமனங்கள்

2025 ஒக்டோபர் 11 அன்று தலைவர் எம்.பீ.எம்.பைறூஸ் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் ஸ்தாபக போஷகராக முன்னாள் தலைவர் என்.எம். அமீன் நியமிக்கப்பட்டார்.

- o உப தலைவர்கள்: ஷிஹார் அனீஸ், ஜெம்சித் அஸீஸ்
- o தேசிய அமைப்பாளர்: றிப்தி அலி
- o உப செயலாளர்கள்: றம்ஸி குத்தூஸ், சமீஹா ஷபீர்
- o உப பொருளாளர்: ஏ.எச்.எம். பௌஸான்
- o சஞ்சிகை ஆசிரியர்: எஸ்.ஏ.எம். பவாஸ்
- o இணையத்தள ஆசிரியர்: றிஸ்வான் சேகு முகைதீன்

துணைக்குழுக்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# மாவட்ட அமைப்பாளர்கள் நியமனம்

2025 ஒக்டோபர் 11 அன்று தலைவர் எம்.பீ.எம்.பைறூஸ் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் மாவட்ட அமைப்பாளர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| கொழும்பு | – | அக்ரம் லுத்பி |
| களுத்துறை | – | அஜ்வாத் பாஸி |
| கம்பஹா | – | பியாஸ் முஹம்மத் |
| கண்டி | – | எம்.ஏ. அமீனுல்லாஹ் |
| மாத்தளை | – | எம் . சதூர்தீன் |
| மட்டக்களப்பு | – | உமர் அறபாத் |
| திருகோணமலை | – | ஓ. கியாஸ் ஷாபி |
| அம்பாறை | – | ஏ.பீ.புவாது |
| புத்தளம் | – | எஸ்.எம்.எம். முஸப்பிர் |
| குருநாகல் | – | யு.எல். முஸம்மில் |
| காலி | – | இஸ்பஹான் சாப்தீன் |
| ஹம்பாந்தோட்டை | – | இஸட்.எம். இர்பான் |
| மாத்தறை | – | எம்.பர்ஹான் |
| மன்னார், முல்லைத்தீவு | – | முஜீப் ரஹ்மான் |
| யாழ்ப்பாணம்,கிளிநொச்சி | – | ஜே.எம்.ரிஸ்வான் |
| வவுனியா | – | எஸ்.எம்.சர்ஜான் |
| அநுராதபுரம் | – | எம்.பிர்தௌஸ் |
| மொனராகல | – | எம்.எஸ்.எம்.சல்சபீல் |
| பதுளை | – | எம்.டிபாயிஸ் |
| கேகாலை | – | அல்தாப் முஹம்மத் |



## தகவல் திணைக்கள பணிப்பாளருடன் சந்திப்பு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் புதிய செயற்குழு தனது முதற்கட்ட உத்தியோகபூர்வ சந்திப்கை அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் H.S.K.J. பண்டாரவுடன் முன்னெடுத்தது. இதன்போது ஊடகச் சட்டங்கள் மறுசீரமைப்பு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரித் திட்டங்கள், புலமைப் பரிசில் வாய்ப்புகள் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையை பலப்படுத்துதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதன்போது திணைக்களம் ஊடகவியலாளர்களின் நலனுக்காக முன்னெடுக்கும் ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்துத் தெளிவுபடுத்தினார். இரு நிறுவனங்களும் இணைந்து செயற்பட இணக்கம் காணப்பட்டது.

## இ.ஒ.கூ. தலைவருடன் சந்திப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் கலாநிதி உதித கயாஷான் குணசேகரவுடனான சந்திப்பு 2025 நவம்பர் 17 அன்று இடம்பெற்றது. இச்சந்திப்பில் முஸ்லிம் சேவையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களை நிரந்தரமாக்குதல், கலைஞர்களுக்கான கொடுப்பனவு வழங்கல், விளம்பரங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்குமிடையில் சமநிலையைப் பேண வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட விரிவான அறிக்கை கையளிக்கப்பட்டது. கோரிக்கைகளைப் பணிப்பாளர் சபையின் கவனத்திற்குொண்டு சென்று தீர்வைப் பெற்றுத் தருவதாகத் தலைவர் உறுதியளித்தார். இதில் தலைவர் எம்.பி.எம். பைறூஸ், ஸ்தாபக போஷகர் என்.எம்.அமீன், உப தலைவர் ஜெம்சித் அஸீஸ், முன்னாள் தலைவி புர்கான் பி இப்திகார் மற்றும் முஸ்லிம் சேவைப் பிரதானி பாத்திமா ரினூஸியா ஆகியோர் பங்கேற்றனர்.





## ஊடகத்துறை பிரதி அமைச்சர் சந்திப்பு!

2026 ஜூலை 02 அன்று ஊடகத்துறை பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்தினவுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது RTI ஆணைக்குழுவை வலுப்படுத்தல், ஊடகவியலாளர் பட்டய நிறுவனம், இ.ஒ.கூ. முஸ்லிம் சேவை மேம்பாடு மற்றும் கலைஞர்கள் கொடுப்பனவு, பெண் ஊடகவியலாளர் பயிற்சி, AI நெறிமுறை, பாடசாலை ஊடகக் கழகங்கள், புலமைப் பரிசில் மற்றும் நலன்புரித் திட்டங்கள் குறித்த விடயங்கள் முன்வைக்கப்பட்டன. கோரிக்கைகளைக் கேட்டறிந்த பிரதி அமைச்சர், PTA நீக்கம், ஊடகவியலாளர்களைப் பாதிக்காத வகையிலான சட்ட வரைபு, கலைஞர்கள் கொடுப்பனவு பற்றிய சிக்கல்களுக்குத் தீர்வுகாணல் உள்ளிட்ட உறுதிமொழிகளை வழங்கியதுடன் அசிதிசி புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கவும் ஊக்கப்படுத்தினார்.



## பங்களாதேஷ் பேராசிரியருடன் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்த பங்களாதேஷ் டஃபோடில் சர்வதேச பல்கலைக்கழக ஊடகத் துறை இணைப் பேராசிரியர் அப்துல் கபில் கானுக்கும், போரத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் 2025 நவம்பர் 13 அன்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனக் கேட்போர்கூடத்தில் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் தலைமையில் இடம்பெற்றது. இலங்கை ஊடகப் பட்டதாரிகளுக்குப் பட்ட மேற்படிப்புப் புலமைப்பரிசில்கள் பெறுதல், ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சி வழங்கல், கூட்டான கருத்தரங்குகள் ஏற்பாடு செய்தல் மற்றும் எல்லை தாண்டிய அறிக்கையிடல்களை (Cross Border Reporting) வலுப்படுத்துதல் உள்ளிட்ட இருதரப்பு ஊடக ஒத்துழைப்பு விடயங்கள் இதில் ஆராயப்பட்டன.

## அனர்த்த நிவாரணத்துக்கு நிதியுதவி!

2025 டிசம்பர் 18 அன்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். றிஸ்வி முப்தி முன்னிலையில், வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவரும் பிரபல தொழிலதிபருமான பீர்கான் றிஸ்வி தனது சொந்த நிதியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு ஒரு தொகை நிதியை அன்பளிப்புச் செய்தார். அமைப்பின் தேசிய அமைப்பாளர் றிப்தி அலியின் முயற்சியால் பெறப்பட்ட இந்நிதியின் ஒரு பகுதி கடந்த நவம்பர் மாத இறுதியில் நாட்டில் ஏற்பட்ட தித்வா அனர்த்ததால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.





## ஜம்இய்யதுல் உலமாவுடன் சந்திப்பு

2025 டிசம்பர் 18 அன்று உலமா சபை தலைமையகத்தில் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். றிஸ்வி முப்தி தலைமையிலான நிறைவேற்றுக் குழுவுக்கும் போரத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

நூற்றாண்டு வரலாறு கொண்ட உலமா சபையின் பணிகள் குறித்த விளக்கமும், சமூக வலுவூட்டலில் ஊடகவியலாளர்களின் வகிபாகம், அனர்த்த நிவாரணப் பணிகள் குறித்த கலந்துரையாடல்களும் நடைபெற்றன. உலமா சபையின் கடந்த 3 வருடச் செயற்பாட்டு அறிக்கை போரத்திடம் வழங்கி வைக்கப்பட்டது. இதில் போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த நிவாரணமும் கள விஜயங்களும்!








தித்வா அனர்த்தங்களால் நாடெங்கும் பாதிக்கப்பட்ட சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 35 ஊடகவியலாளர் களை இனங்கண்டு அவர்களுக்கான நிவாரணப் பணிகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டன. அமைப்பின் தலைவர் தலைமை யிலான குழுவினர் கம்பளை, கெலிஓயா, வெல்லம்பிட்டி, மெகட கொலன்னாவ, மள்வானை, மூதூர், கல் எல மற்றும் நாத்தாண்டிய ஆகிய பிரதேசங்களுக்குக் கள விஜயம் செய்து ஊடகவியலாளர்க ளுக்கு ஆறுதல் கூறியதுடன், உலர் உணவுப் பொதிகள் மற்றும் சுத் திகரிப்பு உபகரணங்களையும் வழங்கினர். இதற்கு கட்டார் செரிட்டி மற்றும் ஜே.ஜே. பவுண்டேசன் ஆகிய அமைப்புகள் உதவின.





## டிஜிட்டல் பாதுகாப்புப் பயிற்சிநெறி!

2026 ஜனவரி 24 அன்று தாய்லாந்து Asia Centre நிறுவனத்துடன் இணைந்து 'ஊடகவியலாளர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு' இணையவழி செயலமர்வு நடத்தப்பட்டது. போரத்தின் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் Asia Centre திட்ட முகாமையாளர் Sanjay Gathia வளவாளராகக் கலந்துகொண்டதுடன், 45 மும்மொழி ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் பயன்பெற்றனர். பங்குபற்றுனர்களின் விருப்பத்திற்கேற்ப, பிராந்திய மட்டத்தில் இத்தகைய பயிற்சிநெறிகளை முன்னெடுக்க SLMMF மற்றும் Asia Centre இணைந்து வழிகாட்டல்களை வழங்கவுள்ளன. சர்வதேச தரத்திலான பயிற்சி வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.







## சட்டமூலமும் கருத்துச் சுதந்திரமும்!

2026 பெப்ரவரி 12 அன்று "பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலம் கருத்து சுதந்திரத்திற்கு சவாலாகுமா?" எனும் தொனிப்பொருளிலான விசேட இணைய வழி கலந்துரையாடல் தேசிய அமைப்பாளர் நிப்தி அலியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது. இலங்கை திறந்த பல்கலைக்கழக வருகை தரு விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான வசீமுல் அக்ரம் வளவாளராகக் கலந்துகொண்டு, புதிய சட்டமூல வேறுபாடுகள், வரைவிலக்கணத் தெளிவற்ற தன்மை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான தாக்கம் குறித்து விளக்கமளித்ததுடன், கேள்விகளுக்கும் பதிலளித்தார். சிரேஷ்ட, இளம் ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்ட இம்முயற்சி, விழிப்புணர்வு ஏற்படுத்தும் போரத்தின் பணிகளில் ஒன்றாகும்.

## போதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் "முழு நாடும் ஒன்றாக" எனும் கருப்பொருளிலான போதை ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ் மொழி மூல ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு ஒன்றை அரசாங்க தகவல் திணைக்களம் 26.11.2025 அன்று நடாத்தியது. திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் இந்த செயலமர்வை நடாத்துவதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் முன்னெடுத்தது. இந்த கருத்தரங்கில் தேசிய ஊடகங்களில் பணியாற்றும் தமிழ் மொழி மூல ஊடகவியலாளர்களும் போரத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.












# துருக்கி தூதரக அனுசரணையில் சர்வதேச ஊடகப் பயிற்சித் திட்டம்!

அமைப்பின் ஸ்தாபக போஷகர் என்.எம். அமீன் மற்றும் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது அங்கத்தவர்களுக்கு சர்வதேச ஊடக பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக 2026 ஏப்ரல் 20–24 ஆம் திகதிகளில் போரத்தின் 10 உறுப்பினர்கள் துருக்கியில் ஊடகப் பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

துருக்கித் தூதுவர் Dr. Semih Lütfü Turgut அவர்களின் வழிகாட்டலில் இந்தத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கத்தவர்கள் மத்தியில் திறந்த விண்ணப்பம் கோரப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்த 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இக் குழுவுக்கு அமைப்பின் உப தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஷிஹார் அனீஸ் தலைமை தாங்கினார். இதற்கு முன்னர் வெளிநாட்டு ஊடகப் பயிற்சி வாய்ப்புகளைப் பெறாத அங்கத்தவர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

TiKA அனுசரணையில் TRT Academy நடாத்திய இப் பயிற்சி நெறியில், TRT செய்தி அறை அனுபவங்கள் மற்றும் நேரடிப் பயிற்சிகள் மூலம் அங்கத்தவர்கள் பயிற்றப்பட்டதுடன் பங்கேற்பாளர்கள் கையடக்கத் தொலைபேசி மூலமான வீடியோ தயாரிப்பில் நிபுணத்துவம் பெற்றுக் கொண்டனர்.






## Next Gen ஊடகவியல் பயிற்சி

இளைஞர் யுவதிகளைத் திறமையான, சமூகப் பொறுப்புள்ள ஊடகவியலாளர்களாக வார்த்தெடுக்கும் நோக்கில், ஒரு வருட கால நேரடி மற்றும் இணையவழிப் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் 50 இளைஞர்கள் (மாவட்டத்துக்கு 2 பேர்) தேர்ந்தெடுக்கப்படவுள்ள இத்திட்டத்தில், புலனாய்வு ஊடகவியல், டிஜிட்டல்/மொபைல் ஊடகவியல் (MoJo), தரவு ஊடகவியல், இணையப் பாதுகாப்பு, AI பயன்பாடு, ஊடகச் சட்டம் மற்றும் RTI ஆகியவை கற்பிக்கப்படும். இத்திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

(முன்மொழிவு: ஷிஹார் அனீஸ்)




## AI Literacy பயிற்சிப் பட்டறை

SAWM SL நிறுவனம் SLWJA, SLMMF மற்றும் JPC ஆகியவற்றுடன் இணைந்து AI தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயன்பாடு தொடர்பில் பெண் ஊடகவியலாளர்களை வலுப்படுத்தும் பயிற்சித்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் புத்தளம் மாவட்டத்திற்கான பயிற்சிநெறியின் பங்காளராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் செயற்படுகிறது. 2026 நவம்பர் 03 ஆம் திகதி நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறிக்கு புத்தளம் பிரதேச பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

## பாடசாலை ஊடக கழகம்!

தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் ஊடகக் கழகங்களை உருவாக்குவதற்கு அரசாங்க தகவல் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தயாராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் கீழ் முஸ்லிம் பாடசாலைகளில் ஊடகக் கழகங்களை ஆரம்பித்து, அவற்றை அரசாங்க தகவல் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். அத்துடன், கழகங்களில் இடம்பெறும் மாணவர்களின் ஊடகத் திறன்களை மேம்படுத்தவும் பொறுப்பான ஊடகவியலைக் கடைப்பிடிக்கவும் சிறப்புப் பயிற்சி நெறிகள் நடாத்தப்படும்.

(முன்மொழிவு: எஸ்.ஏ.எம். பவாஸ்)

## ஊடகப் பாலம் (Media Bridge)

சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் அனுபவங்களை ஆவணப்படுத்தி தலைமுறை இடைவெளியைக் குறைக்கும் நோக்கில், நிகழ்நிலைத் தொடர் நிகழ்ச்சியாக இத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் நடத்த எதிர்பார்க்கப்படும் இத்தொடரில், சிரேஷ்ட ஊடகரின் அனுபவப் பகிர்வு, இளையவரின் நவீன கண்ணோட்டம் மற்றும் கேள்வி பதில் நிகழ்ச்சியும் இடம்பெறும். இதன் மூலம் மூத்த தலைமுறை ஊடகவியலாளர்களின் அனுபவங்களை இளம் ஊடகவியலாளர்களுக்கு கொண்டு செல்ல முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(முன்மொழிவு: எஸ்.என்.எம்.சுஹைல்)

## உயர்தர மாணவர் கருத்தரங்கு

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான "உயர்தர ஊடகக் கல்வி" வழிகாட்டலை வழங்கும் நோக்கில் Zoom நிகழ்வுகள் முன்மொழியப்பட்டுள்ளது. துறைசார் நிபுனர்கள் மற்றும் ஊடகத்துறை கல்வித் திட்டத்துடன் தொடர்புடையோரின் வழிகாட்டலில் பாடத்தெரிவு, பல்கலைக்கழக வாய்ப்புகள் மற்றும் தொழில்முறை வழிகாட்டல் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. 2026 சதாரண பரீட்சை நிறைவடைந்தவுடன் இக் கருத்தரங்குகளை நடத்த எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் தேசிய அளவில் ஊடத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்கள் ஆரம்பத்திலேயே அடையாளம் காணப்பட்டு மேலதிக பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.

(முன்மொழிவு: எஸ்.என்.எம். சுஹைல்)

# பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட முஸ்லிம் மீடியா போரத்தின் கோரிக்கை!

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக் கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தின் போது, இ.ஒ.கூ. முஸ்லிம் சேவையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் சமர்ப்பித்த பரிந்துரைகளை முன்னிறுத்தி இம்ரான் மகரூப் எம்.பி, உதுமா லெப்பை எம்.பி மற்றும் ரிஷாத் பதியுதீன் எம்.பி ஆகியோர் பாராளுமன்றத்தில் உரையாற்றினர்.

குறிப்பாக ரமழான் காலத்தில் நீண்ட விளம்பரங்களைத் தவிர்த்து நேரத்தை மட்டுப்படுத்தல், முழுநேரப் பணிப்பாளர் மற்றும் முஸ்லிம் நிபுணர் குழுவை நியமித்தல், தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல், மற்றும் வருமானத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் விளம்பரங்களை சமநிலைப்படுத்தி நிகழ்ச்சி நேரத்தை அதிகரித்தல் போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டதுடன், இது தொடர்பான முஸ்லிம் மீடியா போரத்தின் கடிதம் இ.ஒ.கூ. தலைவரிடம் கையளிக்கப்பட்டமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் இம்ரான் மகரூப் SLMMF இன் பரிந்துரைகளை முன்னி றுத்தி 2025.11.22 அன்று அனுப்பிய கடிதத்திற்கு, ஊடகத்துறை பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்தின கடிதம் மூலம் பதிலளித்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன் தொடராக ஊடகத்துறைப் பிரதியமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்தின அவர்களுக்கும் முஸ்லிம் மீடியா போரம் பிரதிநிதிகளுக்குமிடையில் 2026 ஜூலை 02 அன்று நடந்த சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டன.

# ஊடகவியலாளர்களின் நலன் பேணல்!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அங்கத்தவர்களது நலன்களைப் பேணும் வகையில் தனியான நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான முதற்கட்ட நிதிப்பங்களிப்பை அமைப்பின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் செயற் குழு உறுப்பினருமான இர்ஷாத் ஏ காதர் வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து அமைப்பின் தற்போதை தேசிய அமைப் பாளர் றிப்தி அலியின் முயற்சியினால் பிரபல தொழிலதிபர் பீர்கான் றிஸ்வி அவர்களின் நிதிப் பங்களிப்புடன் இந்த நிதியம் பலப்படுத்தப்பட்டது. இந்நிதியின் மூலம் தீவிர நோய்களுக்குள் ளாகும் மற்றும் மரணிக்கும் அங்கத்தவர்களுக்கு செயற்குழு வினால் தீர்மானிக்கப்படும் தொகை பகிர்ந்தளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# அறிக்கை!

## பிரதியமைச்சரின் குற்றச்சாட்டுக்கு அதிருப்தி

சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் முனீர் முளப்பர் 2026 ஜூன் 11 அன்று பாராளுமன்றத்தில் முஸ்லிம் ஊடகங்கள் குறித்து முன்வைத்த பொதுப்படையான குற்றச்சாட்டுக்கு 2026 ஜூன் 18 அன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்தியது. பக்கச்சார்பான ஊடகங்கள் இருப்பின் பெயர் கறித்துச் சுட்டிக்காட்டுமாறு வலியுறுத்திய போரம், 2026 ஜூன் 15 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத் தீர்மானத்தின்படி, அப்பொதுவான கருத்தைத் திருத்திக் கொள்ளுமாறும் ஊடகச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

## கலாநிதி ரவூப் ஸெய்னிடம் விளக்கம் கோரல்

அஷ்ஷெய்க் ரவூப் ஸெய்ன் சமூக ஊடகங்களில் வெளியிட்ட பதிவில், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு சில முஸ்லிம் ஊடகவியலாளர்கள் உளவுத் தகவல்களை வழங்குவதாகவும் அவர்கள் முஸ்லிம் மீடியா போரத்தில் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இக்குற்றச்சாட்டு அமைப்பின் நற்பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியதாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து, செயற்குழுக் கூட்டத் தீர்மானத்தின்படி அவரிடம் விளக்கம் கோரப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர் இந்த விடயத்தில் போரத்தின் பெயரைப் பயன்படுத்தியமைக்காக மன்னிப்புக் கோரியதுடன் இதற்கும் போரத்திற்கும் சம்பந்தமில்லை என உறுதிப்படுத்தி வருத்தம் தெரிவிக்கும் பதிவையும் தனது முகநூலில் வெளியிட்டிருந்தார்.

## தகவல் அறியும் சட்டத்தை வலுப்படுத்த கோரிக்கை

தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரிக்குமாறும் அதற்கென அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் போதிய நிதியை ஒதுக்கீடு செய்யுமாறும் கோரி இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரமும் நிதி அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தன. இதில் ஏனைய ஊடக அமைப்புகளும் தமது பங்களிப்புகளை வழங்கியிருந்தன. இதே வேளை தகவல் அறியும் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் சிவில் அமைப்புகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் போரம் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

## ஊடக உயர் தொழிலாளர் பட்டயம் பெற்ற நிறுவனம்

முன்மொழியப்பட்டுள்ள இலங்கை ஊடக உயர் தொழிலாளர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம் தொடர்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் சக முன்னணி ஊடக அமைப்புகளுடன் இணைந்து போரமும் தனது ஆட்சேபனையை வெளியிட்டது. இந்த நிறுவனமானது அமைச்சரால் அன்றி ஊடக நிறுவனங்களினாலேயே சுயாதீனமாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த ஊடக அமைப்புகள் இதன் மூலம் சுட்டிக்காட்டின. இதற்குப் பதிலாக ஊடக ஆணைக்குழு ஒன்றைத் தோற்றுவிக்குமாறும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

# மறைந்த ஊடக ஆளுமைகள் 02

## ஏ. எம். வைஸ்

**உடத்தலவின்னை**

சட்டத்தரணியும், இலக்கிய ஆய்வாளரும், தேசிய சேமிப்பு வங்கியின் கண்டி மாவட்ட சட்ட ஆலோசகருமான ஏ.எம். வைஸ், இலங்கையின் முன்னணி ஊடகவியலாளர்களில் ஒருவர். நவமணி, தினகரன் மற்றும் விடிவெள்ளி உள்ளிட்ட தேசிய இதழ்களில் ஆக்கங்களை வழங்கியதோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக உறுப்பினராக அமைப்புக்கு பெரும் பங்காற்றியுள்ளார். 22.10.2025 அன்று மரணிக்கும் வரை அமைப்பின் சட்ட ஆலோசகராகவும் பொறுப்பு வகித்தவர். இவர் மத்திய மாகாணத்தின் முக்கிய ஆளுமைகளில் ஒருவராவார்.



## ஏ.எல்.எம். சலீம்

**நிந்தவூர்**

ஐந்து தசாப்தங்களாக (1966 முதல்) ஊடகத் துறையில் முத்திரை பதித்தவர். வீரகேசரி, தினகரன், விடிவெள்ளி, சுடர்ஒளி உள்ளிட்ட தேசிய இதழ்களுக்குச் செய்திகள் வழங்கியதுடன், இளைய தலைமுறையினரை ஊடகவியலாளர்களாக வளர்த்தெடுத்தவர். இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஆரம்பகால அங்கத்தவராகவும் சேவையாற்றியவர். ஊடகத்துறையில் பல விருதுகளைப் பெற்ற அன்னார், 25.03.2026 அன்று காலமானார். தமிழ் முஸ்லிம் சமூகங்களின் இணைப்பு பாலமாகவும் விளங்கினார்.



## இக்பால் அத்தாஸ்

**கொழும்பு**

ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை ஊடகத்துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்த புலனாய்வு இதழியலின் முன்னோடியே இக்பால் அத்தாஸ். 'சண்டே டைம்ஸ்'"Situation Report", பி.பி.சி., சி.என்.என். ஊடகப் பணிகள் வாயிலாகப் பாதுகாப்பு மற்றும் அரசியல் களத்தில் முத்திரை பதித்தவர். 'CPJ Press Freedom Award' உள்ளிட்ட விருதுகளைப் பெற்றதோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் 1997 இல் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ரியவர் அன்னார் 13.01.2026 அன்று கொழும்பில் காலமானார்.



## பீ.எம். அன்வர்

**கலேவெல, நமடகஹவத்தை**

கல்விப் புலத்தில் 38 ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியதோடு, ஊடகத்துறையிலும் தனது பயணத்தைத் தொடர்ந்தவர். 1996 முதல் தினகரன், 2014 முதல் விடிவெள்ளி பத்திரிகைகளின் நிருபராகவும், 2005 முதல் பி.பி.சி. (BBC) வானொலி செய்தி சேகரிப்பாளராகவும் முத்திரை பதித்தவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் (SLMMF) இணைந்து சமூகப் பணியாற்றிய அன்னார், தனது 80வது வயதில் 08.05.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.



# புதிய இலச்சினை அறிமுகம்!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் புதிய இலச்சினை செயற்குழுவின் அங்கீகாரத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மர்ஹூம் கலைவாதி கலீல் அவர்களால் வரையப்பட்ட முன்னை இலச்சினையை டிஜிட்டல்மயப்படுத்தி சகல ஊடக தளங்களையும் உள்ளீர்க்கும் வகையில் புதிய இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய இலச்சினையை அமைப்பின் அங்கத்தவர் ஏ.ஜே.எம்.பிறவ்ஸ் வடிவமைத்துள்ளார். இதில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையிலான அம்சங்கள் புதிய இலச்சினையில் உள்ளீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SRI LANKA MUSLIM MEDIA FORUM
EST. 1995
- SLMMF -

# இணையத்தள அங்குரார்ப்பணம்!




ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்திற்கென கடந்த காலங்களில் இணையத்தளம் ஒன்று இயங்கி வந்த போதிலும் தொழில்நுட்ப காரணங்களால் அது செயலிழந்திருந்தது. இந்நிலையில் புதிய செயற்குழுவின் அனுமதியுடன் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் அவர்களின் முயற்சியினால் புதிய இணையத்தளம் ஒன்று வடிவமைக்கப்பட்டு இன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது. இதன் மூலம் அமைப்பின் செயற்பாடுகளை வெளி உலகுக்கு கொண்டு செல்ல முடிவதுடன் அங்கத்தவர்களுக்கும் அமைப்பின் நிர்வாகத்திற்குமிடையில் இலகுவான தொடர்பாடலுக்கான தளமாகவும் இது இயங்கும். இந்த இணையத்தளத்தை அமைப்பின் அங்கத்தவர் ஏ.ஜே.எம்.பிறவ்ஸ் வடிவமைத்துள்ளார்.

# போஷகர் என்.எம். அமீன் கௌரவிக்கப்பட்டார்!

2025/26 ஆம் ஆண்டுக்கான SLMMF செயற்குழுவின் முதலாவது கூட்டத்தில், அமைப்பின் முன்னாள் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான என்.எம். அமீன் அவர்கள் தொடர்ச்சியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஸ்தாபக போஷகராக நியமிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி புகைப்படப் பேழை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# அமைப்பின் பிரதிநிதித்துவம்!



சவூதி தூதுவரின் பிரியாவிடை வைபவத்தில்...



புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பு நிகழ்வு...



நிந்தவூரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சலீம் நினைவேந்தல் நிகழ்வில்...



கொழும்பில் இடம்பெற்ற துருக்கிய சதிப்புரட்சி 10 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில்



அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற AI ஊடக கருத்தரங்கில்...



தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சலீம் நினைவேந்தல் நிகழ்வு...

# 30 ஆண்டு பூர்த்தியும் வருடாந்த பொதுக் கூட்டமும்




















## CONTACT US

Sri Lanka Muslim Media Forum
(SLMMF)
41/2, Vijitha Road,
Nedimala, Dehiwala,
Sri Lanka

0772355980
0714901181
muslimmediaforum@gmail.com
www.slmmf.lk

## SUPPORT US

Sri Lanka Muslim Media Forum
Account Number - 3268511
Bank of Ceylon
Lake House Branch

# ஊடகர்களை வலுவூட்டல்; அமைப்பை பலப்படுத்தல்!

ஒரு வருட
செயற்பாடுகளும்
அடைவுகளும்!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்

செயற்பாட்டு
அறிக்கை
2025/2026